மே - 6

**"எவர்கள் தேவனுடைய ஆவியினால், நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." - ரோம 8 : 14.**

ஆகவே ஓட்டத்தின் ஆரம்பத்தில் மாத்திரமல்லாமல் ஆனால் அதன் கடைசிவரை நமது உண்மையான நிலையை, அதாவது நாம் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறோமோ என்று அறிந்து கொள்ள இதுதான் வழிகாட்டியாக இருக்கிறது. நாம் பின் தொடர்ந்து கொண்டிருக்கிற திசை அதுவாக இருக்குமானால், நாம் நாடித் தேடிக் கொண்டிருப்பதும் அதுவாக இருக்குமானால், அப்பொழுது, நாம் தேவனுடைய புத்திரராயிருக்கிறோம். கிறிஸ்து மூலமாக தன்னிடம் வரும் யாவரையும், கர்த்தராகிய யேசுவின் புண்ணியத்திலே நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறவர்களையும் இருதயத்தில் இவ்வித மனப்பாங்கில் தொடர்ந்து இருக்கிறவர்களையும் தேவன் சொந்தமாக பாவித்து ஏற்றுக் கொள்ளுகிறார். **- Z '03, 173 (R 3200)**

இங்கே தேவனுடைய ஆவி என்பது தன்னுடைய பிள்ளைகளிடத்தில் இருக்கிற தேவனுடைய குணத்தைக் குறிக்கிறது. அவருடைய குணம், நீதி, அன்பு, வல்லமை இவைகளை பூரண இசைவில் ஒன்று சேர்க்கிறது. யாருடைய உத்தேசங்கள், எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் இந்த குணத்தினால் ஏவப்படுகின்றனவோ, ஆதரிக்கப்படுகின்றனவோ, அவர்கள் தன்னுடைய சொந்த ஜனங்களென்று தேவனால் முத்திரையிடப்பட்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் தேவனோடு அவர்கள் புத்திரராக இருக்கும் நிலைக்கு மிகவும் பலமுள்ள சாட்சி அவர்களுக்கு இருக்கிறது. தேவனுடைய குணத்தை அடையாளமாகவும் முத்திரையாகவும் கொண்ட இக்குடும்பம் எவ்வளவு உயர்ந்த குடும்பமாக இருக்கிறது. **- P '26, 61.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யாக் 33:3,14; எண் 9:15-23; 2நாளா 5:13,14; சங் 5:8; 23:2,3; 25:5,9; 32:8; 143:10; நீதி 8:20,21; ஏசா 48:17; யோவா 16:13; 1கொரி 3:16; 6:19; கலா 4:6.

**கோபுர வாசிப்பு** : **Z '14, 355 (R 5582).**

**வினாக்கள்:** இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆவியின் அத்தாட்சி எனக்கு இருக்கிறதா? இந்த வாரத்தில் அது தன்னை எவ்வாறு வெளிப்படச் செய்தது? அதன் பலன் என்ன?